செ.கு.எண்: 348

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 21.9.2012

கடலூர் மாவட்டம், சோழதரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.தம்பியாபிள்ளை அவர்கள் 13.9.2012 அன்று மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.குப்புசாமி அவர்கள் 9.9.2012 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 14.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்ட ஆயுதப் படை பிரிவில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. N.அனில்குமார் அவர்கள் மீது 9.9.2012 அன்று மரம் முறிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 14.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.பிச்சைஅம்பலம் அவர்கள் உடல்நலக் குறைவால் 16.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், M.புதுப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. மாரியப்பன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 16.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M. ஆரோக்கியராஜ்

அவர்கள் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 17.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், ஏழுகிணறு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.டேவிட் ஜெய்சிங் அவர்கள் 19.9.2012 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. பிச்சைஅம்பலம், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. தம்பியாபிள்ளை, திரு. குப்புசாமி, திரு. மாரியப்பன், திரு. ஆரோக்கியராஜ், திரு. டேவிட் ஜெய்சிங் மற்றும் ஆயுதப் படை காவலர் திரு. அனில்குமார் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்தில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. குப்புசாமி மற்றும் திரு. டேவிட் ஜெய்சிங் மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. தம்பியாபிள்ளை, உடல்நலக் குறைவால் காலமான உதவி ஆய்வாளர் திரு. பிச்சைஅம்பலம், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. மாரியப்பன், திரு. ஆரோக்கியராஜ் மற்றும் மரம் முறிந்து விழுந்ததால் உயிரிழந்த ஆயுதப் படை காவலர் திரு. அனில்குமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9